தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௪௫	திருவள்ளுவர் யாண்டு ௨௲ சௌமிய, மார்கழி 1969-டிசம்பர் — 1970-சனவரி	மலர் ௫

திராவிட மொழிகளின் வழக்கும் குடிமதிப்பும்

(டாக்டர் மோ. இசரயேல்.)

உலகின்கண் பேசப்படுகின்ற எல்லா மொழிகளையும் சில மொழிக் குடும்பங்களைச் சேர்ந்தனவாகப் பகுக்கலாம். எட்டு அல்லது ஒன்பது மொழிக்குடும்பங்களைக்[1] குறிப்பிடத்தக்க பெரிய மொழிக் குடும்பங்களாக மொழியியல் அறிஞர் கருதுகின்றனர். திராவிட மொழிக்குடும்பம் இவற்றுள் ஐந்தாவது அல்லது ஆறுவது இடத்தைப் பெற்றுள்ளது எனலாம்.

இந்தியாவில் வழங்கும் எல்லா மொழிகளையும் நான்கு மொழிக் குடும்பங்களுக்குள் அடக்கிப் பகுத்துக்கொள்ளுதல் இயலும். அவையாவன: 1. இந்தோ - ஐரோப்பிய மொழி இனம் (இந்திய ஆரிய மொழிகள்) 2. திராவிட மொழி இனம் 3. ஆஸ்திரிக் மொழி இனம் (முண்டா இன மொழிகள்) 4. திபத்தோ-சீன மொழி இனம் (திபத்தோ-பர்மன் மொழிகள்) என்பனவாம். இந்த மொழிக் குடும்பங்களில் திராவிட மொழிகள் இரண்டாவது பெரிய இடத்தைப் பெற்றுள்ளன.

இந்தியாவிலும் பாகிசுதானத்தில் உள்ள பலுசிஸ்தானம், ஆப்கானித்தானத்திலும் திராவிட மொழிகள் வழங்குகின்றன. இந்தியாவில் 107, 410, 820 மக்கள் திராவிட மொழி பேசுகின்றனர். இது இந்தியாவின் மொத்த மக்கட்டொகையில் 27.47% (நூற்றுக்கு 27.47) ஆகும்[2]. 1961-ஆம் ஆண்டைய இந்தியக் குடிமதிப்பு அறிக்கையில் திராவிட மொழிக் குடும்பத்தின் கீழ் 153 தாய் மொழிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் 104 தாய் மொழிகளை நன்கு அறியப்படுகின்ற நான்கு திராவிட மொழிகளின் கீழ் பாகுபடுத்தலாம் எனவும் 49 தாய் மொழிகள் நன்றாக அறிந்துகொள்ள இயலாத (அதாவது பாகுபடுத்திச் சொல்ல இயலாத) திராவிட மொழிகளாக உள்ளன எனவும் இவ்வறிக்கைக் கூறுகிறது[3].

குடிமதிப்பு அறிக்கையில் 104 தாய் மொழிகள் தொடர்புள்ள மொழிகளாக அறியப்பட்ட திராவிட மொழிகளின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன. 1961ஆம் ஆண்டுக் குடிமதிப்பு அறிக்கையில் ஒல்லாரி, சலூர் (கடபா), குவி, பிராகுய் ஆகியவை தாய்மொழிகளாகக் குறிக்கப்படவில்லை. குவி என்னும் மொழி கோந்த் அல்லது கோண்ட் என்று குறிக்கப்படும் மொழியேயாகும். 1951-ஆம் ஆண்டுக் குடிமதிப்பில் 54,454 மக்கள் கடபா மொழியைப் பேசுகின்றதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் ஒல்லாரி, சலூர் ஆகிய மொழிகளின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. திராவிட மொழிகளின் சொற்பிறப்பகராதியும், தெலுங்கு வினையடிகள்[4] என்னும் நூலும் இவைகளைக் கடபா என்னும் மொழியின் உள்ளடக்கிக் காட்டுகின்றன. பிராகுய் மொழி பாகிஸ்தானத்தில்தான் வழங்குகின்றது.

திராவிட மொழிகளில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளும் இந்தியக் குடியரசுச் சட்டம் எட்டாவது பட்டியலில (Eighth Schedule) குறிக்கப்பட்டுள்ளன. 1961-ஆம் ஆண்டுக் குடிமதிப்புப்படி இந்நான்கு மொழிகளையும் பேசுகின்ற மொத்த மக்கட்தொகை 102, 662, 447. இது திராவிட மொழி பேசுகின்ற மொத்த மக்கள் தொகையில் 95.58% ஆகும். திராவிட மொழிகள் பேசப்படுகின்ற இடங்களையும் வெவ்வேறு திராவிட மொழிகளைப் பேசுகின்ற மக்கள் தொகையையும் கீழே காண்போம்:

I. தென் திராவிட மொழிகள்

1. **தமிழ்:** இந்தியாவில் 30,562 698 மக்கள் தமிழ் மொழியைப் பேசுகின்றனர். இவர்களில் 28,011,099 பேர் தமிழ் நாட்டில் வாழ்கின்றனர் மைசூர், கேரளம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் தமிழர்கள் நல்ல எண்ணிக்கையில் காணப்படுகின்றனர்.

இந்தியாவிற்கு வெளியே இலங்கை, பர்மா, மலேயா, இந்தோனேசியா, மத்திய, தென் ஆப்பிரிக்கா, பிரிட்டிஷ் கயானா, பிசித் தீவுகள், மடகாசுகர், திரினிதாத் ஆகிய நாடுகளில் பல மக்கள் தமிழ் மொழியைப் பேசுகின்றனர்.

2. **மலையாளம்:** இந்தியாவில் 17,015,782 மக்கள் மலையாள மொழியைப் பேசுகின்றனர். இவர்களில் 16,065,468 பேர் கேரள மாநிலத்தில் வாழுகின்றனர். தமிழ் நாடு, மைசூர், மகாராட்டிரம் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் மலையாளம் பேசுகின்ற மக்களை மிகுதியாகக் காணலாம்.

3 கன்னடம்: இந்தியாவில் 17,415,827 மக்கள் கன்னடம் பேசுகின்றவராவர். இவர்களில் 15 361,051 பேர் மைசூர் மாநிலத்தில் வாழுகின்றனர். தமிழ் நாடு, மகாராட்டிரம், ஆந்திரம், கேரளா ஆகிய மாநிலங்களிலும் கன்னடம் பேசுகின்ற மக்கள் மிகுதியான எண்ணிக்கையில் வாழ்கின்றனர்.

4. குடகு: இம்மொழியை 79,172 மக்கள் பேசுகின்றனர் இம்மொழி பேசுகின்ற 78,202 பேர் மைசூர் மாநிலத்தின் கூர்க் (குடகு) மாவட்டத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் வாழ்கின்றனர்.

5. தோடா: இம்மொழியைப் பேசுகின்ற மக்கள் தொகை 765 தான். இவர்கள் தமிழ் நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் உள்ள நீலமலை முடியில் வாழ்கின்றனர். இவர்களில் 5 பேர் மட்டும் மகாராட்டிர மாநிலத்தில் வாழ்கின்றனர்.

6 கோதா: இம்மொழியைப் பேசுகின்ற 956 பேர் நீலகிரி மாவட்டத்தில் உள்ள நீலமலை அடிவாரத்தில் வாழுகின்றனர். இவர்கள் படகர் வாழ்கின்ற மேற்பகுதிக்கும் குறும்பர் வாழுகின்ற கீழ் வனப்பகுதிக்கும் இடையில்தான் இவர்கள் வாழுகின்றனர்

7. படகா: இம்மொழியைப் பேசுகின்றவர்கள் 85,463 மக்கள் ஆவர். இவர்களில் 85, 371 மக்கள் சென்னை மாநிலத்தில் உள்ள நீலமலையில் தோடர் வாழுகின்ற மலைமுடிக்கும் கோதர் வாழுகின்ற மலையடிக்கும் இடைப்பட்ட பகுதியில் வாழுகின்றனர் எஞ்சியோர் கேரளம், மைசூர் ஆகிய மாநிலங்களில் வாழுகின்றனர்.

II. நடுத் திராவிட மொழிகள்

1 தெலுங்கு: இந்தியாவில் 37,668,137 மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர் இவர்களில் 30,931,957 பேர் ஆந்திர மாநிலத்தில் வாழுகின்றனர். தமிழ் நாடு, கேரளம், மைசூர், ஒரிசா, மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களிலும் தெலுங்கு பேசுகின்ற மக்கள் நல்ல எண்ணிக்கையில் வாழ்கின்றதைக் காணலாம். இந்தியாவில் திராவிட மொழி பேசுகின்ற மக்கள் எண்ணிக்கையில் தெலுங்குதான் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

2. துளு: இம்மொழியைப் பேசுகின்ற மக்கள் எண்ணிக்கை 935 108 ஆகும். இவர்களில் 840, 611 பேர் மைசூர் மாநிலத்தில் மங்களூர் பகுதியிலும், ஏறத்தாழ 67000 பேர் கேரளா மாநிலத்திலும் 11000 பேர் மகாராட்டிரத்திலும் 5000-பேர் தமிழ் நாட்டிலும் வாழுகின்றனர்.

3. கோலாமி: இம்மொழியை 46,065 மக்கள் பேசுகின்றனர். இவர்களில் 38,822 பேர் மகாராட்டிர மாநிலத்தின் வார்தா, இயோத்மால் (Yeotmal) ஆகிய மாவட்டங்களிலும் 6,192 பேர், ஆந்திராவில் அடிலபாத்து மாவட்டத்திலும் வாழ்கின்றனர்[5].

4 நாய்க்கி: இந்திய மொழிகளின் வழக்கு அளவீட்டு நூலில் இது ஒரு வட்டார மொழியாகக் கோலாமி என்னும் மொழியோடு இணைத்துக் கூறப்படுகிறது. இவை இரண்டும் கோண்டி மொழியோடு நெருங்கிய தொடர்புடையவை என்றும் சொல்லப்படுகின்றது. மேலும் சந்தா மாவட்டத்தில் 195 மக்கள் இம்மொழியைப் பேசுகின்றதாக இந்நூல் குறிக்கின்றது[6] 1961-ஆம் ஆண்டுக் குடிமதிப்பில் நாய்க்கி ஒரு தனி மொழியாகக் குறிக்கப்படவில்லை. நாய்க்கி மொழி பேசுகின்ற 1000 மக்கள் மகாராட்டிர மாநிலத்தின் சந்தா மாவட்டத்தில் இப்பொழுது வாழ்கின்றதாகத் தெரியவருகின்றது.

5 பர்சி: இந்திய மொழிகளின் வழக்கு அளவீட்டு நூல் பர்சியை ஒரு வட்டார மொழியாகவே (dialect) கருதுகின்றது. ஆனல் இன்று இது ஒரு தனி மொழியாகக் கருதப்பட்டு, பரோ என்னும் அறிஞரால் இதற்கு ஒரு விளக்க இலக்கணமும் எழுதப்பட்டுள்ளது[7].

இம்மொழியைப் பேசுகின்ற மக்கள் 109,401 பேர் ஆவர். இவர்களுள் 83,914 பேர், ஒரிசா மாநிலத்தின் கோராபுட், கலகந்தி மாவட்டங்களிலும் 24,718 பேர் மத்திய பிரதேசத்தின் பாசுத்தார் மாவட்டத்திலும் வாழ்கின்றனர். இன்னும் சிலர் அசாமிலும் மேற்கு வங்காளத்திலும் உள்ளனர்.

6-7 ஒல்லாரி-சலூர்: இவைஇரண்டுமொழிகளாகத் திராவிட மொழியியல் அறிஞர்களால் குறிக்கப்பட்டுள்ளன. இவை கடபர் என்னும் இனத்தவரால் பேசப்படுகின்றதால் கடபர் மொழி எனவும் அழைக்கப்படுகின்றது. இந்திய மொழிகளின் வழக்கு அளவீட்டு நூலிலும் 1961-ஆம் ஆண்டுக் குடிமதிப்பிலும்

ஒல்லாரி, சலூர், கடபா ஆகிய பெயர்களில் ஒன்றும் குறிக்கப் படுகின்றதில்லை.

ஆனால் சென்னை மாநிலத்தின் 1931-ஆம் ஆண்டுக் குடி மதிப்பு அறிக்கையில் 797 கடபர், கடபா மொழியின் ஹல்லாரி என்னும் வட்டார மொழியைப் பேசுகின்றதாகக் குறிக்கப் படுகிறது. இன்னும் ஒல்லாரிகள் ஹொல்லார் கடபர் என்று அழைக்கப்படுகின்றனர்[8]. இந்தியாவின் 1951-ஆம் ஆண்டுக் குடி மதிப்பு அறிக்கையின்படி 64,454 மக்கள் கடபா மொழியைப் பேசியதாகத் தெரிகின்றது இவ்வறிக்கையிலும் ஒல்லாரி, சலூர் ஆகிய மொழிகளின் பெயர்கள் இல்லை. சலூர் மொழி போயா என்றும் அழைக்கப்படுகின்றது என்று தெரிகிறது.

கடபா மொழியைப் பேசுகின்றவர்கள் ஒரிசா மாநிலத்தின் கோராபுட் மாவட்டத்திலும் ஆந்திர மாநிலத்தின் சிகாகுளம், விசாகப்பட்டணம் ஆகிய மாவட்டங்களிலும் வாழுகின்றனர். வேறு ஒரு குறிப்பின்படி ஏறத்தாழ 2000 கடபர்தான் இன்று வாழ்கின்றதாக அறிகின்றோம்[9]

8. கோண்டி: 1,501,431 மக்கள் இம்மொழியைப் பேசுகின் றனர். இவர்களில் 1,046,086 பேர் மத்திய பிரதேசத்திலும் 347,087 பேர் மகாராட்டிரத்திலும் 75,964 பேர் ஆந்திராவிலும் 20,087 பேர் ஒரிசாவிலும் 11,454 பேர் அசாமிலும் வாழ்கின் றனர்

9. பெங்கு: இம்மொழியை 1957-ஆம் ஆண்டு பரோ, பட்டாச்சாரியா ஆகிய ஆராய்ச்சி அறிஞர்கள் கண்டு ஆய்ந் தனர். இம்மொழி 1951, 1961 ஆகிய ஆண்டுக் குடிமதிப்பு அறிக்கைகளில் குறிக்கப்பட்டுள்ளது 1961-ஆம் ஆண்டைய அறிக்கையின்படி இம்மொழி பேசுகின்ற 1254 மக்கள் ஒரிசா மாநிலத்தின் கோராபுட், கலசந்தி ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்றனர்.

10. மண்டா: இம்மொழியை 1964-ஆம் ஆண்டு பரோ, பட்டாச்சாரியா ஆகிய அறிஞர்கள் கண்டுபிடித்தனர். குடி மதிப்பு அறிக்கைகளில் இம்மொழியின் பெயர் கூறப்படவில்லை. இம்மொழியைப் பேசுகின்றவர்கள் ஒரிசா மாநிலத்தின் கலசந்தி, கோராபுட் மாவட்டங்களின் எல்லைகளில் வாழ்கின் றனர். மக்கட்தொகை திட்டவட்டமாகத் தெரியவில்லை.

11. கோண்டா: இம்மொழியை 12,298 பேர் பேசுகின்றனர். இவர்களுள் 10,490 பேர் ஒரிசா மாநிலத்தின் கோராபுட்

மாவட்டத்திலும் இன்னும் சிலர் ஆந்திரம், அசாம், மத்திய பிரதேசம், திரிபுரா ஆகிய மாநிலங்களிலும் வாழுகின்றனர்.

12. குவி: இப்பெயர் இந்திய மொழிகளின் வழக்கு அளவீட்டு நூலிலும், குடிமதிப்பு அறிக்கையிலும் குறிப்பிடப்படவில்லை ஆனால் குடிமதிப்பு அறிக்கைகளில் கோண்ட் அல்லது கோந்த் என ஒரு மொழியின் பெயர் உள்ளது. குயி மொழி என்றும் வேறு ஒரு மொழி தனியாகக் குறிப்பிடப்படுகிறது. எனவே கோண்ட் அல்லது கோந்த் என்று குறிக்கப்படுவது குவி மொழியேயாகும் என்று கருதப்படுகின்றது கோண்ட் அல்லது கோந்த் ஒரு இன மக்களைக் குறிப்பது என்றும் அவர்கள் குயி, குவி ஆகிய தொடர்புபட்ட இரு மொழிகளைப் பேசுகின்றனர் என்றும் குயி மொழி என ஒன்று அறிக்கையில் கூறப்படுதலால் கோண்ட் (கோந்த்) என்று குறிப்பிடப்படுவது குவி மொழியே ஆகும் எனக் கொள்வது சாலப் பொருந்தும்.

இதனைப் பேசுகின்ற மக்கட்தொகை 168,027 ஆகும். இவர்களுள் 146,922 பேர் ஒரிசா மாநிலத்தின் கோராபுட் மாவட்டத்திலும் 22,730 பேர் ஆந்திராவில் சிகாகுளம், விசாகப் பட்டணம் ஆகிய மாவட்டங்களிலும் இன்னும் ஒரு சிலர் அசாமிலும், மேற்கு வங்காளத்திலும் வாழுகின்றனர்.

13. குயி: இம்மொழியைப் பேசுகின்றவர்கள் 510,907 மக்கள். அனைவரும் ஒரிசாவில் கோண்ட்மால் மாவட்டத்தில் வாழுகின்றவர்களாவர்.

14. கோயா: இம்மொழியின் பெயர் பல திராவிட மொழி ஒப்பிலக்கண நூற்களிலும் குறிப்பிடப்படவில்லை. டாக்டர் கிருட்டிணமூர்த்தி இதன் பெயரை மட்டும் குறிப்பிடுகிறார்[10]. இந்திய மொழிகளின் வழக்கு அளவீடு கோதாவரி, பாசுத்தார், சந்தா மாவட்டங்களில் வழங்குகின்றதாகக் குறிப்பிடும் கோண்டி மொழியின் வட்டார மொழி (dialect) 'கோய்' இம்மொழியாக இருக்கலாம் எனக்கருத இடமுண்டு.

இம்மொழியைப் பேசுகின்ற மக்கள் தொகை 140,777 ஆகும். இவர்களில் 108,658 பேர் ஆந்திர மாநிலத்திலும் 31,052 பேர் ஒரிசா மாநிலத்திலும் இன்னும் சிலர் அசாம், மகாராட்டிரம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலும் வாழ்கின்றனர்.

III. வட திராவிட மொழிகள்

1. குருக்: ஓராவோன் என்னும் குருக் மொழியைப் பேசுகின்ற மக்கட்டொகை 1,141,804 ஆகும். இம்மொழியைப் பேசுகின்றவர்கள் மத்திய இந்தியாவிலும் வட இந்தியாவிலும் பல மாநிலங்களில் சிதறி உள்ளனர். குறிப்பாக, பீகார் மாநிலத்தில் 349,377 பேரும், மத்திய பிரதேசத்தில் 276,193 பேரும் மேற்கு வங்காளத்தில் 221,127 பேரும், ஒரிசாவில் 57,346 பேரும், அசாமில் 32,725 பேரும் வாழுகின்றனர்.

2 மால்டோ: இம்மொழியை 88,676 மக்கள் பேசுகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் பீகார் மாநிலத்திலேயே வாழுகின்றனர். மத்திய பிரதேசத்தில் 30 பேரும் மேற்கு வங்காளத்தில் 14 பேரும் வசிக்கின்றனர்.

3 பிராகுய்: இந்தியாவில் பேசப்படாத ஒரே திராவிட மொழி பிராகுய்தான். இம்மொழியைப் பாகித்தானத்தில் வாழுகின்ற 225,000 மக்கள் பேசுகின்றனர் இவர்கள் மேற்கு பாகித்தானத்தில் கலத்து, கயிர்ப்பூர் ஹைதராபாத்து ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்றனர். ஆப்கானித்தானத்தின் தென் பகுதியில் ஏறத்தாழ 40,000 பிராகுய் மொழி பேசும் மக்கள் வாழ்கின்றதாகச் செய்திகள் கிடைக்கின்றன. இது இன்னும் உறுதி செய்யப்படவில்லை[11].

இக்கட்டுரையின்கண் வெவ்வேறு திராவிட மொழிகள்[12] வழங்கும் இடங்களும் அவற்றைப் பேசும் மக்கட்டொகையும் தொகுத்துச் சொல்லப்பட்டன

அடிக்குறிப்புகள்.

1. உலக மொழிக் குடும்பங்கள்:
   1. இந்தோ-யூரோப்பியன். 2. செமிட்டிக்-ஹாமிட்டிக். 3. யூரல்-அல்டாய்க் 4 சீனோ-திபெத்து 5. திராவிடம். 6. சப்பானிஸ்-கொரியன் 7. மலேயா-பாலினேசியன் 8 ஆப்பிரிக்கா-நீக்ரோ. 9. அமெரிக்க இந்தியன்.
2. Census Report of India 1961.
3 தமிழ் (22). தெலுங்கு (36), கன்னடம் (32) மலையாளம் (14)
   104 mother-tongues can be classified under the principal languages which 49 mother-tongues belong to the lessen known ones.
4 Burrou, T. and Emeneau, M. B., A Dravidian Etymological Dictionary, Oxford, 1961 P. XIII
   Krishnamurthi Bh. Telugu Verbal Bases. University of California Press. 1961. PP-236 237.
5. Emeneau M.B., Kolami, A Dravidian Language, 2nd. ed, Annamalai Nagar, 1961.

[268-ஆம் பக்கம் பார்க்க]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

இளங்கோவடிகளின் இலக்கிய அறிவு

(திரு. புலவர், பி. விருத்தாசலம், பி.ஏ.,)

கலித்தொகையை ஒத்த சிறப்புடைய பிறிதோர் அகவிலக்கியம் அகநானூறு ஆகும். அகவிலக்கியம்பற்றிய சங்க இலக்கியங்களுள் 'அகம்' என்னும் சொல்லையே தன்னகத்தே கொண்டுள்ள ஒரு நூல் அகநானூறுதான். அந்த நூலிலும் இளங்கோவிற்கு ஆழமான பயிற்சியுண்டு என்பதைக் கீழ்வரும் செய்திகளால் உணரலாம். அகநானூற்றில் 123ஆம் பாடலைப் பாடியவர் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்னும் புலவர்பெருமான் ஆவர். பூம்புகாரிற் பிறந்து வளர்ந்த அப்பெரும் புலவர் புகார்க்கடற்கரையின் எழின்மிகு காட்சியை அலைக்கடுக்காய்த் தொடர்ந்துவரும் மாபெருங் கடலலைகள் இரு என்று சொல்லப்படும் ஒருவகை மீனைக் கொண்டுவந்து கடற்கரையில் வீசிவிட்டுக் கடலாடும் இளம் பெண்கள் தம் கூந்தலிருந்து அவிழ்த்தெறியும் வாடிப்போன பூமாலைகளை இழுத்துக் கொண்டு மீண்டும் கடலில் செல்லும் காட்சியைப் பலநாளும் பார்த்துப் பார்த்துத் தம் நெஞ்சைப் பறிகொடுத்தவர். மீன்களோ கடலிற் பிறப்பன; வலைஞர்களுக்கும் வணிகர்களுக்கும் பெரும் பொருள் தருவன. பூக்களோ இன்பத்திற்கு அறிகுறியாய் விளங்குவன. கடலலைகள் பண்டமாற்று வாணிகர் போல் பொருளுக்கு அறிகுறியான மீனைத் தந்துவிட்டு இன்பத்துக்கு அறிகுறியான பூக்களைக் கவர்ந்து செல்கின்றன. அக்காட்சி தம் மனைவிபால் பெறும் இன்பத்தைத் துறந்த ஆடவரே பொருள் ஈட்டப் பிரியமுடியும் என்பதைப் புலவர்க்கு உணர்த்திற்று. எனவே, தலைமகன் ஒருவன் மனைவியைப் பிரிந்து பொருள் ஈட்டக் கருதிப் பாலைநில வழியே செல்லும்

[267-ஆம் பக்கத் தொடர்ச்சி]

6. Grierson, G.A. (Ed.) Linguistic Survey of India Vol. IV. Calcutta, 1906, p-571.
7. Burrow, T., and Battacharya, S., The Parji Language Hertford 1953
8. Battacharya S, Ollari, A Dravidian Speech, Government of India Press, Calcutta 1957 p p 1—8
9. Andronor, M S., ' Dravidian Language ". Archir Orientalne, (37) 1963, p 178
10. Krishnamurthi, B.L op cit p 237.
11. Andronor, M S. op. cit, p. 178.
12. இசரயேல், மோ. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண வரலாறு. தமிழ்ப் பொழில் துணர் 43 மலர் 1, பக். 3—12.

போது இடைச்சுரத்தில் (பாலைநிலத்தினிடையில்) தலைவியால் பெறும் இன்பத்தை எண்ணி எண்ணித் தடுமாறி வருந்திய தன் நெஞ்சை நோக்கிக் கடிந்து பேசும்போது, "நெஞ்சே! குன்றங் கடந்து பொருள் ஈட்டவும் ஆற்றாய்! காதலி நல்லகம் பொருந்தி வீட்டிலேயே தங்கின் வறுமையை அஞ்சுகிறாய்! சோழருக் குரிய காவிரி கடலில் கலக்குந் துறையிலே இறா மீனோடு கரைக்கு வந்து மாலையோடு திரும்பிக் கடலுக்குள் செல்லும் கடலலைபோல் பிரிதல் இருத்தல் என்னும் இரண்டில் ஒன்றிற் கூட உறுதியின்றி அலைகின்றாயே" என்று சொல்வதாகப் பாட்டு ஒன்று எழுதினார்.

"உண்ணா மையின் உயங்கிய மருங்கின்
... குன்றம்
இறந்து பொருள் தருதலும் ஆற்றாய். சிறந்த
சில்லைங் கூந்தல் நல்லகம் பொருந்தி
ஒழியின் வறுமை அஞ்சுதி
..
இறவொடு வந்து கோதையொடு பெயரும்
பெருங்கடல் ஓதம் போல
ஒன்றில் கொள்ளாய் சென்றுதரு பொருட்கே!
(அகம் 123)

காவிரிப்பூம்பட்டினத்துக்கடற்கரையில் மாதவி கானல்வரி பாடுவதாக எழுதிய இளங்கோ "கடலலை இறா மீனைத் தந்து விட்டு மாலையைக் கவர்ந்து செல்வதாகக் காரிக்கண்ணனார் அகநானூற்றில் சொன்னதைக் கொஞ்சம் மாற்றி," நறுமணம் வீசும் கடற்கரைச் சோலையிலே கடலலைகள் முத்துக்களைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் பூங்கோதைகளைக் கவர்ந்து கொண்டு விலைஞர்போல்—வணிகர்போல் மீள்வதாக எழுதி யுள்ளார்.

உடன்போக்குச் சென்ற தன் மகள் காதலனோடு திரும்புவாள் என நம்பிய தாயொருத்தி தன் வீட்டை அழகுபடுத்தினாளாம்; வீட்டு முற்றத்தே மணலைப் பரப்பினாளாம்; மாலைகளை எங்கும் கட்டித் தொங்கவிட்டாளாம்; அழகு மிகுந்த வீட்டுச் சுவருக்குச் செம்மண் பூசினாளாம்.

" .. ... . தாயே
புனைமாண் இஞ்சி பூவல் ஊட்டி
மனைமணல் அடுத்துமாலை நாற்றி"
இச் செய்தியை அகம் 195ஆம் பாடல் கூறுகிறது.

கவுந்தி அடிகளால் கண்ணகியை அடைக்கலமாகப் பெற்ற மாதரி அவளையும் அவள் கணவனையும் கட்டுவேலி சூழ்ந்த காவலையும், அழகிய பந்தரையும் உடைய செம்மண் பூசப்பட்ட சிறிய வீட்டிலே தங்கியிருக்கச் செய்தாளாம். அதை

"பூவல் ஊட்டிய புனைமாண் பந்தர்க்
காவற் சிற்றில் கடிமனைப் படுத்து"

(கொலைக் களக்காதை. 56)

எனச் சிலம்பு கூறும் புனைமாண் இஞ்சி பூவல் ஊட்டி 'என்னும் அகநானூற்றுத் தொடருக்கும் பூவல் ஊட்டிய புனைமாண் பந்தர்க் காவற் சிற்றில்' என்னுஞ் சிலப்பதிகாரத்தொடருக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு நம்மை மகிழ்விக்கின்றதல்லவா?

ஞாயிறு மேற்றிசையில் மறைந்த மாலை நேரத்துச் செக்கர் வானத்திற் பறந்து சென்ற வெண்மையான கொக்குக் கூட்டம் செந்நிறம் படைத்த முருகப்பெருமான் மார்பின் மீது கிடந்தசையும் வெண்மையான முத்தாரம் போன்று விளங்கியதாகச் சைவசமயப் புலவர் ஒருவர் அகநானூற்றின் 120ஆம் பாடலில் கூறுகிறார்.

"நெடுவேள் மார்பின் ஆரம் போலச்
செவ்வாய் வானந் தீண்டி மீன் அருந்தும்
பைங்காற் கொக்கின் நிரைபறை யுகப்ப"

இந்த அகநானூற்றுச் செய்யுளே மேற்கு மலையிலிருந்து ஓடிவரும் பேர்ஆறு திருமால் மார்பிற் கிடந்து அசையும் முத்தாரம் போன்று விளங்கிற்று என இளங்கோவடிகளை உவமை கூறச்செய்தது என்பதில் தவறொன்றுமில்லை.

"நெடியோன் மார்பின் ஆரம் போன்று
பெருமலை விலங்கிய பேரியாற்று அடைகரை"

(காட்சிக் காதை 21-22)

முத்து விளையும் கடல் சூழ்ந்த பாண்டிய நாட்டு வேந்தனாகிய தென்னவர் கோமான் தன்னுடைய பாண்டிய நாட்டுக் கடலிலே பிறந்த முத்தாரத்தையும் குறவர்கள் கொண்டுவந்து தந்த பொதியமலையிலே பிறந்த ஆரமாகிய சந்தனத்தையும் தன் மார்பிலே எழில்பெற அணிந்தான் என அகநானூறு சொல்கிறது.

"தன்கடற் பிறந்த முத்தின் ஆரமும்
... ..."

குறவர் தந்த சந்தின் ஆரமும்
இருபேர் ஆரமும் எழில்பெற அணியும்
திருவீழ் மார்பின் தென்னவன் ''

(அகம். 13)

இந்த அகநானூற்றுப் பாடலோடு, நூலிலே கோக்க முடியாத—மலையிலே பிறந்த ஆரமாகிய சந்தனமும், நூலிலே கோத்த கடலிலே பிறந்த ஆரமாகிய முத்தும், தேவர்கோன் தன் மார்பிலே அணிந்த ஆரமும் தென்னவர்கோன் மார்பிடத்து உள்ளன என்ற கருத்தைச் சொல்லும்

"கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம் தென்னவர்கோன் மார்பினவே"

என்னும் ஆய்ச்சியர் குரவைப் பாட்டையும் ஒப்பு நோக்கின் அகம் பாடினதையே சிறந்த ஓசை நயம் கூட்டிச் சிலம்பும் பாடுகிறது என்பது புலனாகிறது அல்லவா?

சங்கத் தொகைநூல் எதிலும் சேர்க்கப்படாத பழம் பாட்டு ஒன்று தொல்காப்பியம் அகத்திணை இயல் 42ஆம் நூற்பாவுக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையால் அறியப்படுகிறது. கன்னி ஒருத்தி தன் காதலனிடத்துத் தனக் கிருந்த கழிபெருங் காதலால் தன் பெற்றோர் உற்றார் உறவினர் யாவரையும் துறந்து தன் காதலனோடு உடன் போக்குச் சென்றாளாம். அவள் சென்ற வழியோ பாலைநில வழி அவ்வழியில் கூவல்கள்—அஃதாவது கிணறுகள் உண்டு. கிணறுகள் உண்டே தவிரக் கிணறுகளில் தண்ணீர் இல்லை. அதனால் நீர் முகப்பதற்காக அந்தக் கூவல்களில் குடம் புகுவதில்லையாம். அத்தகைய குடம்புகாக் கூவல்களையுடைய பாலைநிலத்தில் குடியிருக்கும் மக்களும் தாங்கள் அரிதாகப்பெற்ற சிறிதளவு நீரை வீணாக்கிவிடாது—விலங்குகட்குந் தந்துவிடாது காப்பாற்றிக் கொள்வர். எனவே, குடிக்க நீரும், தங்க நிழலுமின்றி விலங்குகள் அங்குமிங்குந் திரியும் அத்தகைய கொடிய பாலை நிலவழியில் தன் மகளை—உடன்போக்குச் சென்ற பெண்ணைத் தேடிப் போனாள் செவிலித்தாய். வழியிலே அவளைக் கண்டவர்கள் "நீ யார்?" என வினவினர். அவர்களுக்கு விடை கூறிய செவிலி "நீங்கள் வழியிலே பிடியும் களிறும்போலக் காதலியும் காதலனுமாகச் சென்ற ஒரு பெண்ணையும் ஆணையும் பார்த்திர்கள் அல்லவா? அந்த அழகு மகளுக்கு நான்தான் தாய்" என்று விடை சொன்னாளாம்.

“ குடம்புகாக் கூவல் குடிகாக்குஞ் சின்னீர்
இடம்பெறு மாதிரியும் ஏருநீர் அத்தம்
உடம்புணர் காதல் உவப்ப இறந்த
தடம்பெருங் கண்ணிக்கு யான்றாயை கண்டீர் ”

என்பதுதான் நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டும் அந்தப் பாட்டு. இந்தப் பாட்டோடு சிலப்பதிகார வாழ்த்துக் காதையில், காவறபெண்டு சொல் என்னுந் தலைப்போடுள்ள

“ மடம்படு சாயலாள் மாதவி தன்னைக்
கடம்படாள் காதற் கணவன் கைபற்றிக்
... ...
குடம்புகாக் கூவற் கொடுங்கானம் போந்த
தடம்பெருங் கண்ணிக்குத் தாயர்நான் கண்டீர் ”

என்னும் பாடலை ஒப்புநோக்கின் இளங்கோவடிகள் சங்கத் தொகை நூல்களில் தொகுக்கப்படாத பல்லாயிரம் பழம் பாட்டுக்களிலும் ஆழ்ந்த புலமை உடையவர் என்பதை அறியலாம்.

கணவனை இழந்த கண்ணகி மற்றவுயிர்களுக்கு அணுவளவும் தீங்கு செய்தறியாத தனக்கு வந்த பெருந் துயரத்தைத் தடுக்காத அறக் கடவுளைப் பார்த்து “ அறன் என்னும் மடவோய் ” எனப் புலந்து பழிப்பதைச் சிலம்பில் பார்க்கிறோம். இவ்வாறு, தாங்கமுடியாத கொடுந் துயரம் வந்த காலைப் பெண்கள் அறக்கடவுளை நொந்துகொள்ளும் மரபினை “ அறம் புலந்து பழிக்கும் அளைகண் ணாட்டி ” (ஐங்குறுநூறு: 393) “ அன்பில் அறனும் அருளிற்று.” (ஐங். 394) “ காடுபடு தீயிற் கனலியர் மாதோ ....போக்கிய புணர்த்த அறனில் பாலே ” (ஐங். 376) முதலிய ஐங்குறு நூற்றுப் பாடலடிகளால் இளங்கோ அறிந்து தம் நூலில் எடுத்தாண்டார் எனலாம்.

இனிப் பழந்தமிழரது பண்பாட்டுப் பெருமைபற்றிப் பண்பாடுகின்ற புறநானூற்றில் இளங்கோ வேந்தருக்கிருந்த ஈடு இணையற்ற ஈடுபாட்டினைச் சுட்டிக் காட்டச் சில சான்றுகள் தருவேம்.

தன் குடிமக்களைப் புறந்தருகின்றபோது குடிமக்கள் குறைகளைக் கேட்டு அவர்களைக் குறைபோக்கி நிறைவாழ்வு வாழுமாறு செய்யும்போது அருள் மிகுந்த சேரன் செங்குட்டுவன் முகம் பொலிவோடு விளங்கும். அதுபோல வானத்தில் முழுமதியம் உலகத்து மக்கள் கைகூப்பித் தொழுமாறு தோன்றியது என்பர் இளங்கோ:

"குட்டுவன் குடிபுறந் தருங்காற் றிருமுகம்போல
உலகுதொழத் தோன்றிய மலர்கதிர் மதியம்"
(நடுகற் காதை 38, 39)

"அன்னச் சேவல் அன்னச் சேவல்" என்று தொடங்கும் புறநானூற்று 67ஆம் பாடல் கோப்பெருஞ் சோழனைப் புகழ்ந்து பிசிராந்தையார் பாடியதாகும். அப்பாடலில், மாலையில் தோன்றுகின்ற முழுமதியம்.

"ஆடுகொள் வென்றி யடுபோர் அண்ணல்
நாடுதலை அளிக்கும் ஒண்முகம் போலக்
கோடுகூடு மதியம்"

எனப்படுகிறது.

"போர்க்களத்தில் பகைவரைக் கொன்று வெற்றியே பெறும் அண்ணல் கோப்பெருஞ்சோழன். தன் நாட்டு மக்களுக்குத் தலையளி செய்து மகிழும்போது அவன் முகம் ஒளி பொருந்திப் பொலிவோடு விளங்கும் அவனது ஒளி பொருந்திய முகம்போல ஒளி வீசும் இயல்புடையது இளம்பிறையின் இரண்டு கோடுகளும் ஒன்று கூடிய முழுமதியம்." இதுதான் மேற்சுட்டிய புறப்பாடல் பகுதியின் பொருள். எனவே, ஈங்கு எடுத்துக்காட்டப்பட்ட சிலப்பதிகாரப் பகுதியையும் புறநானூற்றுப் பகுதியையும் ஒப்புநோக்கின் பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழன் முகம் போன்றது முழுமதி என்று கூறியதே இளங்கோவைச் செங்குட்டுவன் முகம் போன்றது முழுமதி என்று கூறத் தூண்டியது என்னும் உண்மை, தெளிவு ஆகும்.

திருவிழாக் காலங்களில் நாடகமாடும் நடிகர் பல்வேறு கோலங்கொண்டு ஆடுவர். நடிகரது நடிப்புத் திறத்தால் காண்பவர் கண்களுக்குப் பொய்யான நாடகம் மெய்போலத் தோன்றும் ஆனால், உண்மையோ வேறாக இருக்கிறது. நாடகம் முடிந்ததும் கோலங் கலைகிறது ஒரு நாள் ஒரு நாடகத்தில் அரசனாக நடித்தவன் மறுநாள் நாடகத்தில் ஆண்டியாக நடிக்கலாம். அதுபோலவே, இவ்வுலகம் என்ற பெரிய நாடக மேடையில் உயிர்கள் என்ற நடிகர்கள் அரசனாகவும், அமைச்சனாகவும் வேலையாட்களாகவும் நடிக்கின்றன; குறிப்பிட்ட காலங் கழிந்ததும் குடியிருந்த உடலைத் துறந்து வேறு கோலம் கொண்டு வேறு உடலிற் புகுந்துகொள்கின்றன. பெரிய ஆற்றினது நீர் செல்லும் வழியே செல்லுகிற தெப்பம்போல விதி செல்லும் வழியே உயிர்கள் செல்லுகின்றன. இச்செய்திகளைக்

கீழ்வரும் புறப்பாடல் பகுதிகள் புலப்படுத்தும்.

" ... — — —விழவிற்
கோடியர் நீர்மை போல முறைமுறை
ஆடுநர் கழியுமிவ் வுலகத்து "

(புறம் 29)

" ... ...பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் "

(புறம். 192)

மனித வாழ்க்கையின் மாற்றமுடியாத இயற்கையினைச் சொல்லும் இந்தப் புறப்பாடல்கள் இளங்கோவின் நெஞ்சையும் தொட்டிழுத்திருக்க வேண்டும். அதனால் அவர் மாடல மறையோன் செங்குட்டுவனுக்கு அறிவுரை கூறியதைக் கூறும் போது, மேற்சுட்டிய புறப்பாடல்களின் கருத்தை அப்படியே மாற்றமின்றி எடுத்தாண்டுள்ளார்.

" ஆடுங் கூத்தர்போல் ஆருயிர் ஒருவழிக்
கூடிய கோலத்து ஒருங்குநின் றியலாது
செய்வினை வழித்தா உயிர்செலும் "

(நடுகற் காதை, 165-167)

தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் பகைவரைக் கொன்று களவேள்வி வேட்டதாக மாங்குடிகிழார் புறம் 26-ஆம் பாட்டிற் கூறுகிறார் களவேள்வி செய்யும்போது 'பகைவரது முடிசூடிய தலையை அடுப்பாகக் கொண்டு, பிடரோடு கூடிய யானைத்தலையாகிய பானையை அடுப்பில் ஏற்றி, குருதியை நீராக ஊற்றி, குதிரை முதலிய வற்றின் பல்லைத்தட்டி அரிசியாக இட்டு, தசையையும் நிணத்தையும் அதனோடு போட்டு, தொடி அணிந்த வீரர் தோள்களைத் துடுப்பாகக் கொண்டு கலக்கிய கூழைப் பேய்களுக்கு விருந்து நல்குவராம் அதனைக் கலிங்கத்துப் பரணியில் கண்டு சுவைத்து, நகைக்கலாம். இதனைப் புறநானூறும்.

" முடித்தலை அடுப்பாகப்
புனல்குருதி உலைக்கொளீஇத்
தொடித்தோள் துடுப்பின் துழந்த வல்சியின்
அடுகளம் வேட்ட அடுபோர்ச் செழிய "

எனக் கூறுகிறது தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் பகைவரை வென்று களவேள்வி வேட்டது போலவே

செங்குட்டுவனும் கனகவிசயரை வென்று களவேள்வி வேட்டதாகச் சிலம்பு சொல்கிறது.

"முடித்தலை அடுப்பின் பிடர்த்தலைத் தாழித்
தொடித்தோட் டுடுப்பின் துழைஇய வூன்சோறு
(கால்கோட் காதை. 243-244)

பாண்டியன் நெடுஞ்செழியன் நடத்திய போரிலே இளைஞர்கள் செயற்கருஞ் செயல் செய்து யானைகளை வெட்டி வீழ்த்தி யிறுதியில் மாண்டபோது பெண்கள் பலரும் இத்தகைய வெற்றி இனி நமக்கு உண்டாகுமா எனக் கேட்டு இன்ப உவகையோடு கசிந்து அழுதனராம். அதுகண்டு கூற்றுவன் நாணினனும் அதனை, "மூதில் பெண்டிர் கசிந்தழ நாணிக் கூற்றுக்கண் ணோடிய வெருவரு புறந்தலை" எனப் புறநானூற்றின் 19-ஆம் பாடல் சொல்லும். அவ்வாறே செங்குட்டுவன் வடவரோடு நடத்திய போரிலே சேரநாட்டு வீரர் "கூற்றுவன் கண் ணோடப் பகைவர் தலையை அரிந்து போர்க்களத்தைத் தமதாக்கிக் கொண்டனர் என்னும செய்தியைக் "கூற்றுக் கண்ணோட அரிந்து களங்கொண்டோர்" (நீர்ப்படைக் காதை: 40) என இளங்கோ கூறுவர். பகைவரோடு போர் செய்யும் முன்பு வஞ்சினங் கூறிய தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் "போரில் என் பகைவரை நான் வென்று சிறைசெய்யாவிட்டால் என் நாட்டுக் குடிமக்கள் 'எங்கள் அரசன் கொடியன் என்று' கண்ணீர் விட்டுப் பழி தூற்றும்படி கொடுங்கோல் ஆட்சி செய்தவனாக' என்றானும்.

"கொடியன்எம் இறையெனக் கண்ணீர்பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக"
(புறம் 72 : 11, 12)

நெடுஞ்செழியன் வஞ்சினங் கூறியது போலவே செங்குட்டுவனும் வஞ்சினங் கூறினான் "நான் என் பகைவரை வென்று, அவர் தலைமேல் கண்ணகிக்குச் சிலை சமைக்கக் கல்கொண்டு வாராவிட்டால் பகையரசரை நடுங்கச்செய்யாது என் நாட்டுக் குடிமக்களை நடுங்கச் செய்த கொடுங்கோலன் ஆகுக" என்று அவன் கூறியதைப்,

"பகையரசு நடுக்காது பயங்கெழு வைப்பின்
குடிநடுக்குறும் கோலன் ஆக"
(கால்கோட் காதை.)

எனச் சிலம்பு கூறுகிறது. எனவே, தலையாலங் கானத்துச்

செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனது போர்க்களச் செய்திகளைக் கூறும் புறப்பாடல்கள் செங்குட்டுவன் போர்க்களச் செய்தியை இளங்கோ கூற இனிதே உதவின எனலாம்.

அதியமான் நெடுமான் அஞ்சியோடு போரிட்ட பகைவர் படை 'நிலம் திரைக்கும் கடல் தானை (புறம் 97) என ஔவையாரால் சொல்லப்படுகிறது. படையினது பெருக்கம் நிலத்தின் எல்லையைச் சுருக்கும் என்பது அதன் பொருள் கோவலன் புகழ்ப்பெருக்கம் மண்ணுலகத்து எல்லையினும் பெரியது; அவன் புகழ் மண்ணைத் தேய்த்தது என்னும் பொருளிற் கோவலன் "மண்டேய்த்த புகழினன்" (மங்கல வாழ்த்துப் பாடல்) என இளங்கோ சிலம்பில் கூறுவதை அறியும்போது ஔவையார் இளங்கோவுக்கு ஆசானாக நிற்கும் திறம் நமக்குத் தெரிகிறது.

புறநானூற்றின் 40-ஆம் பாடல் சோழன் நலங்கிள்ளியின் தம்பியான மாவளத்தானைத் தாமப்பல் கண்ணனார் என்னும் புலவர் பெருமான் பாடியது. அப்பாடலில் தாமப்பல் கண்ணனார் மாவளத்தானைக் காவிரி ஆற்று மணலினும் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகிறார்.

" .. .. சிறக்கநின் ஆயுள்
மிக்குவரும் இன்னீர்க் காவிரி
எக்கர் இட்ட மணலினும் பலவே"

இச்செய்தியோடு செங்குட்டுவனை மாடலன் நோக்கி "உலகாளும் வேந்தனே! உன் வாழ்நாட்கள் குளிர்ந்த ஆன்பொருநை யாற்றின் மணலினும் மிகுவதாக" என்னும் பொருளில்,

"மன்னாள் வேந்தே நின்வா ழுநாட்கள்
தண்ணான் பொருநை மணலினுஞ் சிறக்க"
(நடுகற் காதை: 125, 126)

என வாழ்த்துவதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தாமப்பல் கண்ணனார் மொழியை இளங்கோ தம் கண் எனப்போற்றினார் என்பதை யுணரலாம்.

நெற்களங்களில் வைக்கோலைக் கீழே பரப்பிக் காளைகளையும் எருமைகளையும் மூங்கில் கோலால் விரட்டி வைக்கோல் மீது நடக்கவிட்டுப் போரடிப்பர். அதுபோல் செருப்பாழி

எறிந்த இளஞ்சேட் சென்னி தன்னோடு பொருத பகைவர் பிணங்களைக் கீழே பரப்பிக் களிறுகளை எருதுகளாகக்கொண்டு வாளையே மடலாக ஓச்சி அதரி திரித்ததாக – போரடித்ததாகப் புறநானூற்றின் 370-ஆம் பாடலில் ஊன்பொதி பசுங்குடையார் என்னும் புலவர் கூறுகிறார்.

"படுபிணப் பல்போர் பழிய வாங்கி
எருது களிறாக வாள்மடலோச்சி
அதரி திரித்த"

இதுபோலவே செங்குட்டுவன் வடவரோடு நடத்திய போரில் கொம்புகளையுடைய விலங்காகிய யானையைப் பூட்டி வாளையே கோலாகக்கொண்டு, ஆளாகிய வைக்கோலினைப் பரப்பி அதரி திரித்தான் என்பதைக்

"கோட்டுமாப் பூட்டி வாட்கோ லாக
ஆளழி வாங்கி அதரி திரித்த"

(கால்கோள் 232)

எனச் சிலப்பதிகாரமும் சொல்கிறது. புறநானூற்று 229-ஆம் பாடலில் அருவியின் ஓசைக்குப் பறையின் ஓசை உவமையாகக் கூறப்பட்டுள்ளது. "பறையிசை அருவி நன்னாட்டுப் பொருநன்" என்பது பாடல் அடி. அதுபோலச் சிலப்பதிகாரக் காட்சிக் காதையிலும் "பறையிசை அருவிப் பயங்கெழு ஓதை" என்று கூறப்படுகிறது. புறநானூற்று 32-ஆம் பாடலில் சேரன் தலைநகரமான வஞ்சிமாநகரம் பூவா வஞ்சி என்று சொல்லப்படுகிறது. அவ்வாறே சிலப்பதிகாரக் கால்கோட் காதையிலும் வஞ்சிமாநகர் பூவா வஞ்சி எனப்படுகிறது. புறநானூற்று 37-ஆம் பாடலில் சிபிச் சக்கரவர்த்தி என்னும் சோழவேந்தன் புள்ளுறு புன்கண் தீர்த்தோன் எனப்படுகிறான். சிலப்பதிகார வழக்குரைக்காதையிலும் அவ்வேந்தன் புள்ளுறு புன்கண் தீர்த்தோன் என்றே அழைக்கப்படுகிறான். இதனாலும் இளங்கோவடிகள் புறநானூற்றில் ஆழமான பயிற்சி உடையவர் என்பது புலனாகும்

இனி, பத்துப்பாட்டில் இளங்கோவுக்கிருந்த பெரும் புலமை புலப்படச் சில சான்றுகள் தரப்பெறும். பண்டைத் தமிழர் எழுநிலை மாடங்கள் அமைத்து இன்புற்று வாழ்ந்தனர். ஏழு மாடங்களில் மேனிலை மாடம் – கூரை வேயாத மாடமாக – காதலர் ஓயாத இன்பம் துய்க்கும் மாடமாக விளங்கும். இம் மாடத்தை "நிலவுப் பயன்கொள்ளும் நெடுவெண் முற்றம்" என நெடுநல் வாடை கூறும். சிலப்பதிகாரமும் அம்மாடத்தை

"நிலவுப் பயன்கொள்ளும் நெடுநிலா முற்றம்" (அந்திமாலைச் சிறப்புச் செய்காதை 31) எனச் சொல்கிறது. வடக்கில் உள்ள இமயமலையிலிருந்து எடுத்த நல்ல நிறமுடைய உயர்ந்த கல்லிலே சந்தனம் அரைப்பது பண்டை வழக்கம் சிறப்புடைய அச் சந்தனக்கல்லை "வடவர் தந்த வான்கேழ்வட்டம்" என நெடுநல் வாடையும், "வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டம்" என அந்திமாலைச் சிறப்புச் செய்காதையும் சொல்கின்றன. பெண்களுடைய பருத்த முலைகள் வெம்மை தரத்தக்கவை என்பதை "கொம்மை வரிமுலை வெம்மையிற் றடைஇ" என்னும் நெடுநல் வாடை 68-ஆம் அடியால் அறியலாம். சிலப்பதிகாரத்தில் நடுகற் காதையில் பெண்கள் வெம்மை தருகின்ற தம் கொம்மை வரி முலையால் தத்தம் கணவர்க்கு ஒற்றடம் கொடுப்பர் என்னுஞ் செய்தி காணப்படுகிறது.

"கொம்மை வரிமுலை வெம்மை வேது றீஇ"
(நடுகல் : 17)

நன்னன் என்னும் மன்னனுக்குரிய மூதூர் ஒன்றில் ஊரினின்றும் பெயர்தலை அறியாப் பழங்குடி மக்கள் நிறைந்திருந்ததாக மலைபடுகடாம் சொல்கிறது.

"நிதியந் துஞ்சும் நிவந்தோங்கு வரைப்பின்
பதியெழல் அறியாப் பழங்குடி கெழீஇய
... ...
... ... பழவிறல் மூதூர்"
(மலைபடுகடாம். 478-87)

இதனைத் தழுவியே இளங்கோவடிகளும் "பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇப பொதுவறு சிறப்பின் புகார்" எனக் காவிரிப்பூம்பட்டினத்தையும், "பதியெழு வறியாப் பண்பு மேம்பட்ட மதுரை மூதூர்" எனக் கூடல்மாநகரத்தையும் முறையே மங்கல வாழ்த்துப் பாடலிலும் அடைக்கலக் காதையிலும் கூறுகின்றார்.

"சூதர் வாழ்த்த மாகதர் நுவல
வேதா ளிகரொடு"

என்னும் மதுரைக் காஞ்சி 670. 671-ஆம் அடிகளால் மன்னனைச் சூதர், மாகதர், வேதாளிகர் முதலியோர் வாழ்த்துவர் என்பதை அறியலாம் இவ்வாறே

[279 ஆம் பக்கம் பார்க்க]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

கூயமலர்

திரு: சாமி. பிச்சைப் பிள்ளை, எம்.ஏ., பி.எசி.

இவருடையபெயர் வைப்புக்குக்காரணமான 'ஊட்டியன்ன' என்ற உவமை புலவர் பெயர் இல்லாத இரண்டு பாடல்களில் காணப்பட்டதனால் தொகுப்பாளன் அவ்விரு பாடலையும் பாடிய புலவர் ஊட்டியார் என்று சிறப்புப் பெயரிட்டான்[10]. எனவே

[278-ஆம் பக்கத் தொடர்ச்சி]

சிலப்பதிகாரக் கால்கோட் காதையில் வரும்

"மாகதப் புலவரும் வைதா ளிகரும்
சூதரும் நல்வலம் தோன்ற வாழ்த்த"

என்னும் 74, 75-ஆம் அடிகளால் செங்குட்டுவனையும் மாகதர், வைதாளிகர், சூதர் முதலியோர் வாழ்த்தினர் என்பது பெறப் படுகிறது.

சிறுபாணாற்றுப் படையில் பெண்களது விரித்த அழகான கூந்தலைச் சொல்லும்போது அகிற்புகையை ஏற்றுக்கொள்ள விரித்த அழகிய மென்மையான கூந்தல் என்று சொல்லப் படுகிறது. அகிலுண விரித்த அம்மென் கூந்தல் (சிறுபாண் 263) என்பது பாடலடி. அதுபோலவே, சிலப்பதிகாரத்திலும் பெண்ணின் கூந்தலைச் சொலலும்போது "அகிலுண விரித்த அம்மென் கூந்தல்" என்றே சொல்லப்படுகிறது. (நடுகல்: 17)

இதுகாறும் கூறியவற்றால் இளங்கோவடிகள் தம் காலத்திற்கு முன்னர் வாழ்ந்த புலவர் பெருமக்கள் பாடி யருளிய பாடல்கள் அனைத்தையும் பயின்று முற்றுமுணர்ந்த மூதறிஞராக விளங்கினர் என்பதும் 'ஊழ்வினை உருத்து வந்தூட்டும்' முதலிய முப்பெரும் உண்மைகளையும், "தெய்வந் தொளின் தெளிந்தோர்ப் பேணுமின்" முதலிய அறநெறி களையும் வெளிப்படையாகக் கூறுகின்ற இளங்கோவடிகள் முன்னோர் நூல்களை முற்றிலும் ஓதுமின் என்னும் அறநெறி யையும் சொல்லாமல் சொல்லுகிறார் என்பதும் பெறப்படுகின் றன அன்றோ? ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான் றோராகிய அவர் கூறியாங்கு நாம் நடந்தால் வளம்பல பெற்று வாழ்வாங்கு வாழலாம்.

—நிறைவுற்றது

சிறப்புப் பெயர் பெற்ற புலவரின் பாடலிலோ, பாடல்களிலோ அப்பெயருக்குக் காரணமான வருணனையோ, உவமையோ, சொல்லாட்சியோ காணப்படல் வேண்டும்.[11]

சங்க இலக்கியங்களில் இவ்வாறு தொகுப்பாளனால் வழங்கப்பட்டனவாக 25 சிறப்புப் பெயர்கள் கிடைக்கின்றன. அவ்வாறு சிறப்புப் பெயர் பெற்ற ஆசிரியர்களின் பாடலாக ஒரு பெயருக்கு ஒரு பாடல்தான் கிடைக்கின்றது. ஆனால் ஊட்டியார் என்ற புலவர் பெயரில் மட்டும் இரு பாடல்கள் உள்ளன. ஏனெனில் முன் குறிப்பிட்டது போல அவ்விரு பாடல்களிலும் ஊட்டியன்ன என்ற உவமை கையாளப்பட்டுள்ளது. மேலும் அவ்விரண்டு பாடல்களும் புலவர் பெயர் தெரியாப் பாடல்களாகும்.

பெயர் தெரியாப் பாடல்கள் எல்லாவற்றையும் ஒரு புலவரே இயற்றினர் என்றும் வாதிடலாம் அதற்குரிய சான்று இல்லையாதலால் அந்த வாதம் தானே விழுகிறது அந்தப் பாடல்களைப் புலவர் பெயர் தெரியாத பாடல்களாகவே விட்டுவிடத் தொகுப்பாளனுக்கு மனமில்லை தன் இலக்கியத் திறமையைக் காட்டிப் புத்திசாலித்தனமாக அப்பாடல்களின் சிறப்பினைக் கொண்டு சிறப்புப் பெயர் அளித்திருக்கிறன். இது மிகவும் வரவேற்கவேண்டிய செய்தியாகும்

இதே அடிப்படைகளைக் கொண்டு 'கயமனார்' என்ற பெயரை நோக்குவோம்.

கயமனார் இயற்றியதோ 23 பாடல்கள். அவை நான்கு நூல்களில் காணப்படுகின்றன. அகநானூற்றில் பன்னிரண்டு பாடல்களும் நற்றிணையில் ஆறு பாடல்களும் குறுந்தொகையில் நான்கு பாடல்களும் புறநானூற்றில் ஒரு பாடலும் காணப்படுகின்றன[12]. இப்பாடல்களில் குறுந்தொகை ஒன்பதாம் பாடலில்

"பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இனமீ னிருங்கழி யோத மல்குதொறும்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்"

என்ற உவமையைக் கயமனர் கையாண்டுள்ளார். இதைக் கண்ட பிற்கால அறிஞர்கள் 'இவர் உவமையால் பெயர் பெற்றவர்' எனக் கூறிவிட்டனர்.

மேலே கண்ட ஆய்வுப்படி கயமனர் ஒரு பாடல் அதுவும் குறுந்தொகை ஒன்பதாம் பாடல் மட்டும் பாடியிருப்பாராஞல் அந்த அறிஞர்களின் கருத்தை ஏற்கலாம். ஆனல் கயமனர் 23 பாடல்கள் அல்லவோ பாடியிருக்கிறர்.

ஊட்டியார் போன்றவர் பெயரில் இரண்டு பாடல்கள் உள்ளன. அங்குப் பெயர்க் காரணத்துக்குரிய ''ஊட்டியன்ன'' என்ற உவமை இரண்டு பாடல்களிலும் காணப் படுவதுபோல் ''கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்'' என்ற உவமை மற்றப் பாடல்களிலும் காணப்படல் வேண்டும். அவ்வாறு காணப் படவில்லையே !

கயமனர் என்பது சிறப்புப் பெயராயின் தொகுக்கும் போது அவ்விருபத்து மூன்று பாடல்களும் பெயரற்ற பாடல் களாக இருந்திருக்க வேண்டும். குறுந்தொகை ஒன்பதாம் பாடலை இயற்றியவருக்கு இச்சிறப்புப் பெயர் கொடுத்ததாக வைத்துக்கொண்டால் மற்ற 22 பாடல்களையும் இவர்தான் யாத்தார் என்பதற்கு என்ன ஆதாரம் உள்ளது?

எனவே கயமனர் என்பது சிறப்புப் பெயராயின் அப் பெயர்வரக் காரணமான உவமை, அவர் இயற்றியதாக உள்ள மற்றைய பாடல்களிலும் கட்டாயம் இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாததாலும், சிறப்புப் பெயர் பெற்ற புலவர்கள் வரிசையில் பெயருக்குக் காரணமான வருணனையோ, உவ மையோ, சொல்லாட்சியோ காணப்படுவதாலும் 'கயமனர்' என்ற பெயர் சிறப்புப் பெயர் அல்ல என்று உறுதிப்படுகிறது. அது அவர் வாழ்ந்த காலத்திலேயே வழங்கிய இயற்பெயராகும் என்பது மற்றைய முடிவுகளை நோக்கும்போது மிகவும் நன்ருக உறுதிப்படுகிறது.

மேலும் ஔவை சு. துரைசாமி அவர்கள் 'கய' என்ருல் பெருமையென்றும் 'கயமனர்' என்ருல் பெருமை பொருந் தியவர் என்றும் தொல்காப்பியத்தை அடிப்படையாக வைத்து விளக்கியுள்ளார்.[13] ஈண்டு ஔவை சு. துரைசாமி அவர்கள் இதனைச் சிறப்புப் பெயர் என்ருே இயற்பெயர் என்ருே குறிப் பிடவில்லை. ஆனல் அப்பெயருக்குரிய விளக்கத்தை மட்டும் தந்துள்ளார்.

மேலும் கயமனர் எனும் பெயர் அவர் நாளிலேயே வழங்கி வந்த சிறப்புப் பெயர் எனச் சிலர் கூறவும் கூடும். அஃதாவது

குறுந்தொகை ஒன்பதாம் பாடலை இயற்றியபின் இவருக்கு இவர் வாழ்ந்த காலத்திலேயே 'கயமனார்' எனப் பெயர் வைத்தனர் என்று கூறவும் கூடும். அவர் கூற்றை மெய்ப்பிக்கக் குறுந்தொகை ஒன்பதாம் பாடலே மற்றப் பாடல்களுக்கு முன் இயற்றப்பட்டது என்று உறுதிப்படுத்த வேண்டும். அப்படி யாரும் உறுதிப்படுத்தவில்லை. உவமையாலேயே அவர் வாழ்ந்த காலத்திலேயே, அவர் சிறப்புப் பெயர் பெற்றிருப்பாராயின், மற்றச் சிறப்புப் பெயர் போல் உவமை முழுவதும் காணப்படல் வேண்டும். ஊட்டியன்ன, செம்புலப் பெயனீர்போல, வில்லக விரலின், என்பனவற்றுள் முறையே அன்ன, போல, இன் என்ற உவம உருபுகள் நீக்கப்பெற்று மீதியுள்ள உவமையையே பெயராக வைத்துள்ளனர். அதுபோல் ஈண்டு நோக்கின் "கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்" என்னும் உவமையில் "மானும்" என்னும் உருபை நீக்கி, "கயமூழ்கு மகளிர் கண்ணினார்" என்றல்லவா பெயர் அமைந்திருத்தல் வேண்டும்? அவ்வாறன்றிக் 'கயமனார்' என்றே பெயர் அமைந்திருக்கிறது.

மேலும், 'கயமனார்' என்பது வருணனையால் பெற்ற பெயர் என்றாவது கூறமுடியுமா எனின் அதுவும் இயலாது. என்னையெனின் அப்பாடலில் கயத்தைக் கயமனார் வருணித்தாரல்லர். கயத்திலுள்ள நெய்தல் பூவையே "இனமீனிருங்கழி யோதம் மல்குதோறும் கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்" என வருணித்துள்ளார். எனவே, இது வருணனையால் பெற்ற பெயருமாகாது

சொல்லாட்சியால் பெற்ற பெயரோவெனின் அதுவுமன்று. ஈண்டுக் 'கயம்' என்ற சொல்லாட்சி ஏனைய சொல்லாட்சிச் சிறப்பினை ஒப்பு நோக்கும்போது அத்துணைச் சிறப்பானதாகத் தோன்றவில்லை, வில்லகவிரல், கங்குல்வெள்ளம், தேய்புரி பழங்கயிறு என வரும் சொல்லாட்சியைப் போன்று 'கயம்' என்ற சொல்லாட்சி ஏதும் சிறப்புப் பொருளை உணர்த்தவில்லை

எனவே 'கயமனார்' என்ற பெயருக்கும், அவர் பாடலில் வந்துள்ள 'கயம்' என்ற சொல்லுக்கும் எவ்விதத்திலும் தொடர்பில்லை என்பது வெள்ளிடைமலை.

அடிக் குறிப்பு.

1. குறுந்தொகை மூலமும் உரையும். பக்கம். 114
உ. வே. சா. அவர்கள் பதிப்பு.
2. சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை–2 பக்கம் 25.
3. "There is room to infer that 'Kayamanar' is not the poets' name and that is derived from the arresting simile in which the neytal flowers tossed by the waves in the back water are compared to the eyes of ladies bathing in a tank,
—The treatment of nature in Sangam literature–page 165.

4. அகநானூறு-68, 388.
5. குறுந்தொகை-370
6. நற்றிணை-284.
7. குறுந்தொகை-40
8. குறுந்தொகை-47
9 புறநானூறு-243.
10 அகநானூறு-68, 388

11.—1	அணிலாடுமுன்றிலார்	—அணிலாடு முன்றில்-குறு.	41
2	இரும்பிடர்த் தலையார்	—இரும்பிடர்தலை- புறப்.	3
3.	ஊட்டியார்	—ஊட்டியன்ன-அகம்	68, 388
4.	ஓரிற்பிச்சையார்	—ஓரிற்பிச்சை- குறு.	277
5.	கங்குல் வெள்ளத்தார்	—கங்குல் வெள்ளம். ,,	387
6.	கல்பொருசிறுநுரையார்	—கல்பொருசிறுநுரை ,,	290
7.	கவைமகன்	—கவைமகன் ,,	324
8	காலெறி கடிகையார்	—காலெறி கடிகை ,,	267
9	குப்பைக் கோழியார்	—குப்பைக்கோழி ,,	305
10	குறியிறையார்	—குறியிறை- ,,	394
11.	கூகைக்கோழியார்	—கூகைக்கோழி- புறம்.	364
12.	கூவன் மைந்தன்	—கூவற் கூவலன்- குறு.	224
13.	கொட்டம்பலவனார்	—கொட்டுமக் குன்றகத்தது வே- நற்.	95
14.	கோவேங்கைப் பெருங்கதவனார்	—நெடுந்தாள் வேங்கை அருவி- குறு.	134
15.	செம்புலப் பெயனீரார்	—செம்புலப்பெயனீர் ,,	40
16	தனிமகனார்	—தனிமகன்- நற்	153
17.	தேய்புரிப் பழங் கயிற்றினார்	—தேய்புரிப் பழங் கயிறு- நற்.	284
18.	தொடித்தலை விழுத்தண்டினார்	—தொடித்தலை விழுத்தண்டுன்றி- புறம்	243
19.	நெடுவெண்ணிலவினார்	—நெடுவெண்ணிலவு- குறு	47
20	பதடிவைகலார்	—பதடிவைகல். ,,	323

[284-ஆம் பக்கம் பார்க்க]

மார்கழித் திங்களின் மாண்பு!

புலவர். துரை. பிச்சை.

தில்லைப் பெருங்கோயிற் றேவர்க்குப் பொன்வேய்ந்து
தொல்லையாம் மேல்வினையைக் கீறாக்கி—யெல்லுலவும்
நீர்வரைப்பிற் சொல்லுலவ வாதிரைநாள் கொண்டாஅன்
மார்கழித் திங்களின் மாண்பு.

கார்புனைந்த மேனியன்பாற் காதற் கிசைந்ததாலே
சீர்தந்தாள் பாவை; திருப்பாவை—நீர்மைக்கே
தார்புனைந்தான் பேர்புகழ்ந்து தண்பொய்கை புக்காடல்
மார்கழித் திங்களின் மாண்பு.

காசினியிற் காணுருவும் காணாக் கவினுருவும்
மாசின்றிக் கொண்ட பரம்பொருளே—தேசுருவாய்ப்
பார்தனிலே கிறித்துவாகத் தோன்றிமறை தந்ததன்றோ
மார்கழித் திங்களின் மாண்பு.

துன்புற் றுழைந்தபோதுந் தூய்கொள்கைத் தனிலமர்ந்த
இன்பநபி நாயகனார்க் கிசுலாத்தார்—ஒன்றாகச்
சேர்ந்து தொழுதிடுநாள் சேர்ந்திலங்கப் பெற்றதூஉம்
மார்கழித் திங்களின் மாண்பு.

[283-ஆம் பக்கத் தொடர்ச்சி]

21	மீனெறி தூண்டிலார்	—மீனெறி தூண்டிலின்	குறு. 54
22	விட்ட குதிரையார்	—விட்ட குதிரை	,, 34
23	வில்லக விரலினார்	—வில்லக விரலின்	,, 370
24.	நோய்பாடியார்	—நோய் (வருணனை)	அகம். 67
25.	மலையனார்	—மலை ,,	நற். 93

12 அகநானூறு :- 7. 17, 145. 189. 195, 219 221. 259, 275, 321, 383, 397

நற்றிணை :- 12, 198, 279, 293, 305, 324.

குறுந்தொகை :- 9, 356, 378, 396.

புறநானூறு :- 254.

13. 1. ஔவை. சு துரைசாமி அவர்கள் புறநானூற்று உரை பக்கம் 111.

2. "தடவும் கயவும் நளியும் பெருமை"
தொல் —சொல்.— நூற்பா. 320.

உயிரோவியங்கள்.

திரு. வித்துவான். அ. வைத்திலிங்கம்.

ஓவியம் வரைவதற்கு முதன் முதல் வேண்டப்படுவது ஓவியப் புலவனின் தெளிந்த உள்ளமே. உலகின் இயற்கைப் படைப்புக்களாகிய இறைக்காட்சிகளும் அவன் உள்ளத்தின் செயற்கைப் படைப்புக்களாகிய கற்பனைக் காட்சிகளும் முதலில் அவன் உள்ளத்திலேயே தீட்டப்படுகின்றன பின்னரே அவை கிழியில் வரையப்படுகின்றன. ஓவியனின் உள்ளக்கிழியில் வரையப்பட்ட எண்ண ஓவியத்தைத் திரைச்சீலையில் வரையப் பயன்படுபவை பிற புறக்கருவிகளாம்.

அதனைப் பாருங்கள்! நான்குபுறமும் இழுத்துக்கட்டப் பட்ட திரைச்சீலை அது தளர்வின்றி விசிவாக, ஓவியம் வரை வதற்கேற்ற முறையில் கட்டப்பட்டுள்ளது. அதனருகே அமர்ந்திருக்கிறான் ஓவியக் கலைஞன். அவனைச்சுற்றிச் சின்னச் சின்னக் கிண்ணங்களில் வண்ண வண்ணக் குழம்புகள், சில வண்ணக் குழம்புகள் தனித்தனியானவை. சில வண்ணக் குழம்புகள் இரண்டு முதலிய பல வண்ணங்களை ஒன்றாகக் கலந்த கலவை. எழுநிற வண்ணக் கலவைகள் தனித்தனியே உள்ளன. ஒரு கிண்ணத்தில் அமிழ்தம் வண்ணமாக உள்ளது. ஆம், இக்கலைஞர்களுள் ஒருவன் அமிழ்தத்தை வண்ணக் குழம் பாகக்கொண்டு ஓவியம் வரைகிறான். இப்படி இன்னும் என் னென்னவோ வண்ணக்குழம்புகள், அவற்றினருகே தூரிகை கள். இவைதாம் ஓவியனின் ஓவியக்கலையை வெளிப்படுத்தும் அகக்கருவிகளும் புறக்கருவிகளும் ஆம்.

அமிழ்துகொண்டு வரையப்பட்ட ஓவியத்தைக் காண வேண்டுமென்ற மிக்க ஆர்வம் உங்களுக்கு உண்டாகிறதா? அதோ, அதுதான் பாருங்கள்!

கம்பனின் காவியத்தில் ஐந்தாவது காண்டம். அழகான பகுதி! அதன் பெயர் சுந்தரகாண்டம். அந்தக் காண்டத்தில் சீதையைப்பற்றி ஒரு காட்சி! அசோகவனத்தில் சிறையிருக் கும் சீதையை அனுமன் தேடிச்சென்று காண்கிறான். அந்தச் செய்தி காட்சிப் படலமாகத் தீட்டப்படுகிறது கம்பனால்: கம்பன் சீதையின் நிலையை அனுமன் கண்ட வகையில் நமக்கே காட்டவேண்டுமென்று எண்ணுகிறான் கம்பன் சொல்லோவியம் வரைவதிலே வல்லவனல்லவா!

சீதை, தன் இடையைப்போலப் பிற உறுப்புக்களும் மெலிந்திருக்க, புலிக்கூட்டத்திடை அகப்பட்ட மானினம் பேடை போலவும் வெயிலிடை ஏற்றிவைக்கப்பட்ட விளக்குப் போலவும் இருந்தாள் என்றெல்லாம் சொற்களைக்கொண்டு, அடுக்கி அடுக்கிச் சீதையின் நிலையைப் பண்ணிப் பண்ணிச் சொல்லிப் பார்க்கிறான். ஆனால், கம்பன் கருதிய 'சீதையின் நிலை' என்ற ஓவியம் முழுமை பெறவில்லை. அனுமன் கண்ட சீதையின் நிலையை நாம் இப்படிக் கூறினால் கற்பவர் உணர முடியாது என்று காண்கிறான். ஆகையினால் ஓர் ஓவியனைத் துணைக்கு அழைத்துக்கொண்டு வந்து நமக்குச் சீதையின் நிலையினைத் தெற்றெனப் புலப்படுத்திக் காட்டிவிடுகிறான். சொல்லோவியம் வரையும் கம்பனே நல்லோவியம் வரைவதாலேயே சிறையிருந்த சீதையின் நிலையைக்காட்ட இயலுமென எண்ணுகிறான். ஆனால், கம்பனின் சொல்லோவியத்தைப் படிக்கின்றபொழுது அவனுடைய எண்ண ஓவியம் விஞ்சியதா? அன்றி, மன்மதனின் வண்ண ஓவியம் விஞ்சியதா? எனப் புரியாமல் நாம் திகைக்கிறோம்.

இதோ, அந்த ஓவியம்! இதை வரைந்தவனை உங்களுக்குத் தெரியவில்லை......? ஆம், தெரியாதுதான். அவனைக் காண முடியாது. ஏன் தெரியுமா? அவனுக்கு உருவமில்லை. யார் என்று தெரிகிறதா? ஆம்...... ஆம்---- அனங்கவேளேதான். சிவபெருமானால் எரிக்கப்பெற்ற மன்மதனேதான் இனி ஓவியத்தைக் காண்போம்.

இராமபிரானின் தேவி சீதாபிராட்டி. அவள் திருமகள் பிறப்பாவாள். ஆதலால் அவள் அழகுக்கு ஈடு இணை இல்லை. அத்தகைய ஈடிணையற்ற அழகியின் உருவத்தை வரைவது என்பது எளிதில்லை. அதிலும் சிறையிருக்கும், ஒரு நிலையுறாத மென் துகிலினையுடுத்தியுள்ள உருவைப் புலப்படுத்தல் மிக மிகக் கடினம். ஆதலால் அவள் உருவைத் தீட்ட அழகுக்கு அதிபதியான மன்மதன் ஒருவனாலேயே இயலும் எனக் கம்பன் அவனைத் துணைக்கு அழைக்கிறான். ஏன், அழகுக்கு இரதியும் அதிபதிதானே. அதை அவள் வரையக்கூடாதா என்று ஒரு வினா எழும். இது ஒரு நல்ல வினா. இவ்வினா கம்பனின் கவித்திறத்தை அறிய வைக்கிறது. ஏனெனில் புகையுண்ட ஓவியம் போன்ற சீதையின் உருவை, உருவற்ற மன்மதன் வரைவதே பொருத்தம்; உருவுடைய இரதி வரைவது பொருத்தமன்று என்பதனால் என்க.

மேலும், தமிழிலக்கிய வகையில் கோவை என்பது ஒன்று. அதனில், தலைவனே தலைவியின் உருவை வரைவதாக வரும். அதாவது ஆண் மகனே ஓவியனாக விளங்குவான். ஆனபடியால், இங்கும் ஓர் ஆண் மகனே ஓவியனாக விளங்குகிறான் என்பது தோன்று. பிறிதொன்று, ஒருபாலின் அழகும் அமைப்பும் பிறிதாகிய பாலுக்கே உள்ளத்தில் ஊடுருவியிருக்கும் என்பதனால் இங்கே மன்மதன் ஓவியனாயினானென்க. அழகிய மன்மதன் வரையும் ஓவியமும் அழகாகத்தானே இருக்கும். திருமகள் பிறப்பாம் சீதாப்பிராட்டியின் திருவுருவை மன்மதன் வரைவதால் மட்டுமா அவ்வோவியம் அழகு பெற்று விளங்கியது? அவ்வோவியம் வரைவதற்குப் பயன்பட்ட வண்ணக் குழம்பாலும் அழகு மிகுந்தது; கலை ஒளிர்ந்தது. அவ்வண்ணக் குழம்பு என்ன தெரியுமா? திருப்பாற்கடலில் கடைந்தெடுக்கப்பட்ட அமிழ்தம். இனி ஓவியம் அழகாக விளங்குவதற்கு வேறென்ன வேண்டும்! ஓவியம் வரையப்பட்டுவிட்டது. ஆனால் இவ்வளவு அழகாகத் தீட்டப்பட்ட ஓவியம் ஒரு குறையுடையதாக ஆகிவிட்டது. என்ன அக்குறை? மன்மதன் உருவமற்றவனல்லவா! அவனால் வரையப்பட்ட அவ்வோவியம் உயிரற்றதைப்போல விளங்குகிறது. புகையுண்ணப்பட்டுப் பொலிவிழந்து காணப்படுகிறது. உருவமற்ற மன்மதன் வரைந்த ஓவியம் உயிரற்றதுபோலக் காணப்படுகிறது. எனக் கம்பன் சொல்வது மிகமிகப் பொருத்தமே. எப்படியெனில், இராமனும் உயிரைப்பிரிந்து, துயருழந்து, கண்ணீரால் நனைதலும் உயிர்ப்புடையாக்கை வெப்பினால் காய்தலுமாய் ஒரு நிலையுறாத மென்றுகிலுடன் வாடி வதங்கிய கொடிபோலக் காட்சியளிக்கும் சீதையின் நிலையை உணர்த்த வந்த கம்பன், தக்கவோர் ஓவியனாக மன்மதனைத் தேடிப்பிடித்து, அமுது கொண்டு ஓர் ஓவியத்தை அவனால் எழுதச் செய்து, உருவற்ற அவன் எழுதியமையால் காண்பாரின்றிப் புகையுண்ணப்பட்டுக் கிடக்கும் ஓவியமாகச் சீதையைக் கம்பன் சித்திரிக்கின்றான்.

> "தேவு தெண்கட லமிழ்துகொண் டனங்கவேள் செய்த
> ஓவி யம்புகை யுண்டதே யொக்கின்ற வுருவாள்" என

இப்பொழுது சிறையிருந்த சீதையின் நிலை என்ன என்பதை நாமும் கண்டு கொண்டோம். கம்பனும் மன நிறைவு பெற்றான். இவ்வோவியம் மன்மதனால் அமுதக் குழம்பைக் கொண்டு வரையப்பட்டதெனக் கம்பன் குறிப்பிடும் சொல்லோவியமாகும்.

[289-ஆம் பக்கம் பார்க்க]

மதிப்புரை.

தொல்காப்பியம் :- எழுத்ததிகாரம்—இளம்பூரணர் உரை.

பதிப்பு :- திரு. வித்துவான். தி. அடிகளாசிரியர் பேரா சிரியர் கரந்தைப்புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2 (560 பக்கங்கள் காலிகோ கட்டு விலை 12–50)

கிடைக்குமிடம்:- ஆசிரியர்.

விழுமிய பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத் தின் பெருமை விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும் அந் நூல் தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகள் உருண்டோடிவிட்ட மையால் நூலிலும், உரைகளிலும் பற்பல சொற்கள் உருமாறி நிற்கின்றன. அதனால், நூல்நுதலும் பொருளைத் தெளிவுற அறிவதில் கற்போருக்கு ஏற்படும் இடர்ப்பாடுகள் மிகுதி. இதனை நன்குணர்ந்த கரந்தைப் புலவர் கல்லூரிப் பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் அவர்கள் இளம்பூரணர் உரையுடன் கூடிய தொல்காப்பிய எழுத்ததிகாரத்தை இப்போது பதிப் பித்து வெளியிட்டுள்ளார்கள்.

நூலில் ஒவ்வொரு நூற்பாவுக்குப் பின்னரும் பாடவேறு பாடுகளும், பிற நூல்களில் உள்ள ஒப்புமைப் பகுதிகளும் கொடுக்கப்பட்டு உள்ளன. தேவையான இடங்களில் பதிப்பா சிரியர் விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக 'ஆயிடை' என்னுஞ் சிறப்புப் பாயிரப் பகுதிபற்றிய விளக்கத்தைக் (பக்-18) கூறலாம் பழைய ஓலைச்சுவடிகளை வைத்து ஒப்பு நோக்கியமையால் மெய் பற்றிய 141-ஆம் நூற் பாவில் வரும் 'எல்லா மொழிக்கும்' என்னும் பகுதிக்குரிய உண்மை யான பொருளைப் பதிப்பாசிரியர் தெளிவாக்கியுள்ளார். "குற்றியலுகரமும் அற்றென மொழிப" எனும் புணரியல் நூற்பாவில் இமமாட்டே றுஒருபுடைச்சேறல்' என்று இளம் பூரணர் எழுதுவர்- அவ்வுரை ஏற்றதே என்பதை எண்பிக்கும் வகையில் பதிப்பாசிரியர் நன்கு விளக்கம் தருகின்றார்.

இப்பதிப்பால் தமிழ் இலக்கண இலக்கியத்தில் பதிப் பாசிரியர்க்குள்ள ஆழ்ந்த புலமையும். ஈடுபாடும் நன்கு வெளிப் படுகின்றன பழச்சாற்றைப் பொற்கிண்ணத்தில் தந்தாற்போல் தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணர் உரையினை மிகச் சிறந்த முறையில் பதிப்பித்துத் தந்துள்ளார். சுருங்கக் கூறின் இப்பதிப்பு ஒரு ஆராய்ச்சி நூலென்றே கூறலாம்

தான்மட்டும் முன்னிரண்டு அடிகளில் சீதையின் நிலையை யுணர்த்தி மன நிறைவு உண்டாகாமையால் ஓவியந் தீட்ட மன்மதனையமைத்து. பின்னிரண்டடிகளில் அவ்வோவியத்தைச் சொல்லோவியமாக்கிக் காட்டும் கம்பனின் முழுப் பாடல் இதோ,

> "ஆவி யந்துகில் புனைவதொன் றன்றிவே றறியாள்
> தூவி யன்னமென் புனலிடைத் தோய்கிலா மெய்யாள்
> தேவு தெண்கட லமிழ்துகொண் டனங்கவேள் செய்த
> ஓவி யம்புகை யுண்டதே யொக்கின்ற வுருவாள்.

இனி, அடுத்ததாக உள்ள ஓவியத்தைக் காண்போம்-மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் குழந்தை மீனாட்சியைத் தாயார் வருக வருகவென அழைக்கும் வருகைப் பருவம். சொல் லோவியப் புலவர் குமரகுருபரவடிகள் இறைவன் இறைவியின் உருவை ஓவியம் எழுதுவது போன்றதொரு காட்சியைக் காட் டுகிறார்.

இங்கு ஓவியம் வரையும் கலைஞன் சிவபெருமான், அவன் அம்பலத்தின்கண் ஆடும் ஆடற்கலைஞன் மட்டும் அல்லன். இறையனார் என்னும் பெயர் கொண்ட பாடற் கலைஞனும் ஆவான் என நாம் அறிவோம். ஆனால், அடிகள் அவனை ஓவியக் கலைஞன் என்றும் குறிப்பிடுகிறார். தன்னால் அருவ மாக்கப்பட்ட அனங்கவேளை ஓவியம் வரைந்தபொழுது தான் மட்டும் ஓவியம் வரைவதிலே வல்லமையற்றவனாகவா விளங் குவான் ஆடவல்லான்? அவனும் வரைகிறான் தன் தேவி உமா பிராட்டியை ஓவியமாக எம்பெருமாட்டியின் திருவாய்மொழி யினைத் தொடுக்கும் கடவுட் பழம் பாடல் தொடையின் பயனாக எழுதினான்; அவள் அழகை சுவைசெழுமிய தமிழின் துறைகள் தோறும் தோன்றும் சுவையாக வரைந்தான்; தேவியின் வடி வைத் தொழும்பர் உளக்கோயிற் கேற்றும் விளக்காக எழுதிப் பார்த்தான்; வளர்சிமய இமயப் பொருப்பில் விளையாடும் இளமென்பிடியாகப் பர்வதன் குமரியை வரைந்தான்; இப்படிப், பல்வேறு தோற்றங்களாகத் தேவியின் உருவை வரைந்து பார்த்தான் பெருமான். அவன் உருவை வரைய வரைய ஆற்றாமை பெருகிற்றே தவிர ஆறுதல் உண்டாகவில்லை. இறுதியில் தன் உள்ளத்தையே கிழியாகக்கொண்டு; மதுகரம் வாய் மடுக்கும் குழற்காடேந்தும் இளவஞ்சிக்கொடியாக வரைந் தான்; தேவியின் வடிவம், அழகு, மொழி ஆகியவற்றையும் தன் உள்ளக் கிழியில் அழகொழுக எழுதினான். எழுதிப் பார்த்

துக் கொண்டேயிருக்கிறான் அவ் ஆரா அமுதை. இறைவனுக்கே ஆரா அமுதாக விளங்கும் இறைவியின் கருணை, வடிவம் ஆகிய இவற்றை வரைந்து காட்டும் அடிகளின் சொல்லோவியத்தை நாமும் படித்துக்கொண்டே இருக்கவேண்டும்போல் உள்ளது, பாடல்,

"தொடுக்குங் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்தத்
துறைதீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்

தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமையப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்

உடுக்கும் புவனம் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்

மடுக்கும் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெறறபெரு
வாழ்வே வருக வருகவே." என்ற இதுதான்.

இறுதியாக மானிடன் வரைந்த இன்னொரு ஓவியத்தைக் காணபோம். தலைவன் ஒருவனும் தலைவி ஒருத்தியும் உருவாலும் திருவாலும் ஒத்த தன்மையுடையார் இயற்கைப் புணர்ச்சியிற் கூடினர். இக்கூட்டம் தெய்வத்தால் நிகழ்ந்தமையால் தலைவன் முதன் முதல் தலைவியைக் கண்டபொழுது அவள் அழகில் மயங்கி, அதனைக்கண்டு வியந்து இவள் மண்ணக மங்கையோ அன்றி விண்ணக மங்கையோ என ஐயுற்றான். அணங்கு கொல் ஆய்மயில் கொல் கனங்குழை மாதர் கொல் மாலும் என் நெஞ்சு எனவும் கற்பகத்தின் பூங்கொம்போ காமன் தன் பெருவாழ்வோ பொற்புடையப் புண்ணியத்தின் புண்ணியமோ அற்புதமோ அரன் அருளோ எனவும் தனக்குள் சொல்லிக்கொண்டான். பொழிலிடத்தே தலைவியைக் கண்டமையால் தலைவியை மயிலாக எண்ணியது அதன் சாயலையாம். இவ்வியற்கைப் புணர்ச்சியின் பின்னர் இவ்விருவரும்

இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியிற் கூட்டம் ஆகிய கூட்டங்களால் பகற்குறி, இரவுக்குறியின்கண் பூத்தருப் புணர்ச்சி புனல்தருப்புணர்ச்சி என்னும் புணர்ச்சிகளைப் பெற்று மகிழ்ந்தனர். இயற்கைப் புணர்ச்சியின் நெடுநாட்குப் பின்னர் தோழி தலைவனை வரைவு கடாவினாள். தலைவனும் தலைவியைக் கடிமணம் புரிந்து கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தான். ஆனால் தலைவியின் பெற்றோரோ தலைவனுக்குத் தலைவியைத் திருமணம் செய்துதர ஒப்பினாரல்லர். ஆதலால், தலைவன் தான் தலைவியைக் காதலிப்பது ஊரார்க்குத் தெரிந்தால், அவர் அறவழி நின்று தனக்குத் தலைவியை மணமுடித்து வைப்பர் என எண்ணுகிறான். அதற்காம் வழியான மடலேறுதலை மேற்கொள்கிறான். ஏனெனில், காமமுழந்து வருந்தினார்க்கு ஏமம் மடலல்லது இல்லை வலி ஆதலின் என்க.

தலைவனுக்கோ தலைவியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆர்வத் துடிப்பு. அதுவே அவன் உயிர்த் துடிப்பு. அதற்காக அவன் எதுவும்செய்யஆயத்தமாகவுள்ளான் ஆனால், தலைவன் தலைவியைப் பெறுவதற்கு இவ்வழியைக் கையாண்டால் அதனால் அவர்களின் களவொழுக்கம் வெளிப்பட்டு ஊரார் மிக்க அலர் உரைப்பர். அது பெரும்பழியாம் வருத்தத்தைத் தந்து தலைவியின் பெற்றோர்க்குத் துன்பத்தைத் தாரா நிற்கும். ஆதலின் தலைவியை அவர் கடிந்துகொள்ளவுங் கூடும் என்றஞ்சியதோழி தலைவனை அவன் மடலேறுதனின்றும் விலக்க வேண்டுவதற்குரிய வழிகளை ஆய்கின்றாள்.

தலைவன் மடலேறுதல் வேண்டுமெனில், தன்னால்காதலிக்கப் படும் தலைவி இன்னார் என ஊரார் அறியும்பொருட்டுக் கிழியில் அவளுருவை எழுதிய கொடியொன்றை ஏந்திக்கொண்டே மடலூர்தல்வேண்டும். தலைவியோ மிக்க அழகி! தலைவனுக்கு ஓவியம் வரைவதில் வல்ல புலமை உண்டோ இல்லையோ! (தலைவியின் உருவத்தைத் தலைவன்தான் எழுதவேண்டுமெனத் தெரிகிறது.) தலைவன் எழுதும் தலைவியின் உரு அவளின் பேரழகைப் புலப்படுத்தாது என்பதைத் தலைவனுக்கு உணர்த்தி அதன் வாயிலாகத் தலைவனின் மடலேறுதல் முயற்சியைத் தடுக்க எண்ணுகிறாள். அவ்வுயிர்த்தோழி. தலைவனு இதற்கெல்லாம் அசைவான்! கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால் மண்ணில் குமரற்கு மாமலையும் ஒரு கடுகாக ஆகும்பொழுது தன் உயிராம் தலைவியைப் பெற அவளுருவைத்தானு அப்படியே வரைவதிலே தோல்வியுறுவான். அவன் இன்னின்ன முறைப்படி வரைந்துவிடுவேன்

தலைவியின் உருவை என்கிறான். இதைக்கேட்ட தோழி அயர்ந்து விடுகிறாள், தலைவனின் திறமையைக் கண்டு, ஆனால் தலைவியின் உயிர்ப்பாங்கியாயிற்றே. தலைவியின் துன்பம் போக்குதற்கு இம்மடலூர்தலைத் தவிர்க்க வேண்டிய இன்றி யமையாக் கடமையைக் கொண்டவளாயிற்றே. மேலும் ஒரு எண்ணம் பளிச்சிடுகிறது தோழியின் உள்ளத்தில்.

"ஆம்! இவரை இப்படித்தடுத்தாலென்ன?" என எண்ணு கிறாள். "சரி, உங்கள் திறமையால் தலைவியின் அழகுருவைப் பழகிய முறையில் வரைந்து விடுகிறீர்கள். ஆனால் அவள் குயில் மொழியை எங்ஙனம் வரைவீர்" என்கிறாள் தலைவனிடம் முன்னர், குமரகுருபர அடிகள் இயற்றிய மீனாட்சியம்மைப்பிள்ளைத் தமிழில் சிவபெருமான் பிராட்டியின் குழல் மொழியைத் தொடுக்குங் கடவுட் பழம் பாடல் தொடையின் பயனாக வரைந் தான் எனக்கூறியதைக் கண்டோம். அல்லமோ? இங்கு இத் தலைவன் இவ்வினாவிற்கும் அயராமல் விடையிறுக்கின்றான் காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்ட பின்னர் ஆண்டு நிகழ்வது இன்பத்திற்கேதுவாய் எதுவும் இயலும் என்பதே யன்றி இது இயலாதென்பதில்லையே! ஆதலால் தலைவன் மொழியை வரைவேன் என்கிறான். எப்படி? இதோ, தலைவி யின் இன்மொழியைத்தன் ஓவியத்தில் இப்படி வரையப் போகிறேன். என்று தனக்குள் தலைவன் சொல்லிக்கொள்ளும் சொல்லோவியங்கள்:-

"திருந்தார் தொழுங்கழற்சேயன்ன வாணன்தென் மாறை வெற்பில்
அருந்தா அமுதன்ன அம்சொல்நல் லாரழ கார்குழைதோய்
பெருந்தாரை வேல்விழி தந்தவெங் காமப் பிணிதனக்கு
மருந்தா வதுநெஞ்ச மேயில்லை வேறு மடலன்றியே"

என்னும் தஞ்சைவாணன் கோவைப்பாட்டில் தலைவன் தலைவியின் மொழியை 'அருந்தா அமுதன்ன அம்சொல்' என்பதாகவும் மேலும் தலைவன் தன்னைத்தானே புகழ்தலாக உள்ள ஒரு பாடலாக,

நறையல ராவிரைப் போதிசை யாதிசை நான்முகத்தும்
மறையல ராவந்த மான்மகன் யான்தஞ்சை வாணன்
வையைத்
துறையல ராவியங் காவியங் கண்ணி துணிந்துசொல்லுங்
குறையல ரார்குழ லாட்கினித் தீரக் குறையில்லை

எனச் சிலேடை வகையாகவும் தலைவியின் மொழியைத் தான் வரைய வல்லேன் எனத் தலைவன் உணர்த்துகிறான்.

'நறையலர்' என்ற இப்பாட்டுச்சிலேடை நயம் உள்ள பாட்டாகும். பாடலின் வெளிப்பொருள்:- தேன்துளிக்குந் தாமரையில் பொருந்தித் திக்குக்கொரு முகமாகும் நான்முகத் திடத்தும் வேதம் விரிவாக வந்த மாலுக்கு மகன் யான் ஆதலால், காவிப் பூப்போலுங் கண்ணையுடையாய், நீ எழுதப் படாது என்று துணிந்து சொல்லும் குறை அலரார்ந்த குழலையுடையாட்கு இன்று எழுதப்படாதென்று விடத்தக்கதாய குறையில்லை என்பதாம்.

இப்பாடலில், 'திசை நான்முகத்தும் மறையலரா வந்த மான்மகள்' என்ற அடி சிலேடையாக இரு பொருள் உணர்த்தும் நயத்தை ஓர்க. வேதம் ஓதும் நான்முகன் யான் எனத் தலைவன் சொல்வதாகப் பொருள் கொள்ளும்பொழுது தலைவியின் கிள்ளைமொழியை வரையும் ஆற்றலுடையான் என்பதும் நான்கு திசையிடத்தும் களவு வெளியாக வந்த ஆசைகொண்ட புருடன் யான் என்று பொருள் கொள்ளும்பொழுது தலைவியின் பால் ஆராக்காதல் கொண்ட தலைவன் தலைவியின் குயின் மொழியை வரைந்தே தீர்வன் என்பதும் பெறப்படுகின்ற நயத்தை உணர்கையில் இன்பம் உண்டாகின்றதன்றோ!

தலைவன் தலைவியைக் கண்ட காட்சியை முதன்முதலாகத்,

"திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண்
டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியின் ஒல்கி அனநடை வாய்ந்து
உருவளர் காமன் தன் வென்றிக்கொடிபோன்
றொளிர்கின்றதே"

என மணிவாசகப் பெருந்தகை திருக்கோவையாரிற் பாடுவதன் சுவையமிழ்தைப் பருகுக.

முடிவுரை:- அமுதைக் குழைத்தெடுத்துத் தமிழில் வடித்தெடுத்த இத்தகு சொல்லோவியங்களை இன்றும் என்றும் உலவும் உயிரோவியங்களாக நம் திருத்தகு புலவோர்கள் வியத்தகு முறையில் படைத்தளித்திருக்கின்றனர். நமக்குத் துன்பம் நேர்கையில் இச்சொல்லோவியங்களைக் கண்ணுறக் கண்டும் பண்ணில் தோய்த்தும் செவியார இழையவிடுவோமெனில் அத்துன்பமும் இன்பமாய் மாறி நிற்கும் அல்லவா! "யாம்பெற்ற இன்பம்பெறுக இவ்வையகம் என நம்மேலோர் நவின்றதும் இவ்வின்பத்தையே என எண்ணி இறையருள் சான்ற இன்றமிழ்ப் புலவர்களின் நிறைதரும் சொல்லோவியக் காட்சியைக் காணுவம்; கேட்போம், காதினில் இழைப்போம்.

அன்பளிப்பு:

திருவாளர். சொ. அமிர்தகணேச முதலியார் பி.ஏ., அவர்கள் அரசின் பல துறைகளில் சிறப்புற பணியாற்றி முடிவாக, வட்டார உள்ளாட்சித்துறை ஆய்வாளராக (Regional Inspector of Local Boards) இருந்து ஓய்வு பெற்றவர் ஆவார்: அண்மைக் காலத்தில் இறைவன் திருவடி நீழலையடைந்தார். அவரின் விருப்பத்திற்கிணங்க, அன்னாரின் துணைவியார் திருமதி. தருமாம்பாள் அவர்கள் 594 (தமிழ், ஆங்கிலம்) நூற்களையும், இரு கண்ணாடிப் பெட்டகங்களையும், கரந்தைத் தமிழ்ச் சங்க, நூல் நிலையத்திற்கு அன்பளிப்பாகத் தந்துள்ளார்கள். இவை சொ. அமிர்த கணேச முதலியாரின் நினைவாக நூல் நிலையத்தில் இடம்பெறும். அவ்வம்மையாருக்கு எங்களின் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி
ஆய்வுக்கூட அடிக்கல்நாட்டு விழா.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் மேற்பார்வையிலுள்ள. உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளிக்காகக் கட்டப்பெறவிருக்கும் அறிவியல் ஆய்வுக்கூடத்திற்கு, தமிழ்நாடு கல்வியமைச்சர் மாண்புமிகு. இரா. நெடுஞ்செழியன் அவர்களால் 30—1—1970 வெள்ளியன்று அடிக்கல் நாட்டப்பெற்றது. மாண்புமிகு, கல்வியமைச்சர் அவர்கட்கு வரவேற்பு சிறப்புற அளிக்கப்பெற்றது. பேராசிரியர், திரு. அடிகளாசிரியர் அவர்கள் ஓசை நயமுடன் வரவேற்பு வாழ்த்துப் பாவினைப் படித்தார். பள்ளித் தலைமையாசிரியர் அவர்கள் ஆய்வுக்கூடத் திட்டத்தைப்பற்றிய அறிக்கையொன்றினைப் படித்தார். மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆய்வுக்கூடத்திற்கு அடிக்கல் நாட்டிய பின்னர், சிறப்புரையாற்றினர்கள்

"கிரேக்கம், எகிப்துபோன்ற நாடுகளில் நாகரிகம், பண்பு. இலக்கியம், இலக்கணம் முதலியவைகள் தோன்றுவதற்கு முன்னரே, (பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னதாகவே) தமிழ்நாடு நாகரிகம், பண்பாடு, இலக்கியம், இலக்கணம் முதலியவைகளில் சிறந்து விளங்கியது. தமிழ்நாடு நாகரிகம் பெற்றிருந்த காலத்தில், நாகரிகமற்றிருந்த மற்ற நாடுகள் யாவும் இன்று அறிவியற் றுறையில் முன்னேறியுள்ளன. ஆனால் தமிழ் நாடோ மிகவும் அத்துறையில் பின் தங்கியுள்ளது. அறிவியலில் முன்னேறாவிடில் நம் நாடு பொருளாதாரத்திலும் பிறவற்றிலும் முன்னேற இயலாது. அறிவியற் கல்வியின் இன்றியமையாமையைக் கருதியே தமிழ்நாடு அரசு இவ்-யாண்டில் 107 பள்ளிகளில் ஆய்வுக்கூடங்கள் அமைக்க இசைவு தந்துள்ளது."—என மாண்புமிகு அமைச்சர் தம்முரையில் குறிப்பிட்டார்கள். சங்கப் பொருளாளர் நன்றி கூற, சங்க, நாட்டு வாழ்த்துக்களுடன் விழா இனிதே முடிவுற்றது.